2013 ஏப்ரல் 17]

243—

சொந்தக் கட்டடம்

***25556—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, சங்கரி பேரூராட்சி, கஸ்தூரிப்பட்டி அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் எங்கெல்லாம் அங்கன்வாடி மையங்கள், வாடகைக் கட்டடத்திலும், வாடகை இல்லா கட்டடங்களிலும் இயங்கி வருகின்றனவோ அங்கெல்லாம் அங்கன்வாடி மையங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்க வேண்டும் என்று ஆணையிட்டு, ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தமிழகத்தில் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 15,313 அங்கன்வாடி மையங்களுக்குப் பல்வேறு நிதிகளை ஒருங்கிணைத்து சொந்தக் கட்டடங்கள் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின் அடிப்படையில் சங்கரி தொகுதி, சங்கரி ஒன்றியம், கஸ்தூரிப்பட்டிஅங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு, கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, என்னுடைய சங்கரி தொகுதியில், சங்கரி பேரூராட்சி, கஸ்தூரிப்பட்டி அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மேலும், எனது தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் சங்கரி ஒன்றியம், மோரூர் கிழக்கு ஊராட்சி, கருத்தானூர் அங்கன்வாடி மையத்திற்கும், தாரமங்கலம் பேரூராட்சி, 5-வது வார்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலனியில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கும் சொந்தக் கட்டடம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய அங்கன்வாடி மையம் கட்ட வேண்டுமென்றால், மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவிலே பொதுப் பணித் துறையின் பொறியாளர், உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த பிரதிநிதிகள், I.C.D.S.-ன் மாவட்ட திட்ட அலுவலர் ஆகியோர் இடம் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் அந்தப் பகுதியை ஆய்வு செய்து, அந்தக் குழந்தைகளின் வருகையைக் கணக்கிட்டு புதிய கட்டடம் உருவாக வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் விரும்பினார்கள் என்று சொன்னால், இந்தக் குழுவின்மூலம் ஆய்வு செய்யப்பட்டதற்குப் பிறகு, கருத்துரு பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

2013 ஏப்ரல் 17]

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கு நன்றியைக் கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட பல அங்கன்வாடி மையங்கள் வாடகைக் கட்டடத்திலும், பல அங்கன்வாடி மையங்கள் பழுதடைந்த நிலையிலும் உள்ளன. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் அந்தக் கட்டடங்களுக்காக நிதி ஒதுக்கப்பட்டது. இருப்பினும், அந்த நிதி போதாத காரணத்தினால், அந்த வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் அங்கன்வாடி மையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவையில் ஏற்கெனவே கூறிய பதில்தான். இதற்கும் புதியதாக அங்கன்வாடி மையங்கள் கட்ட குழு அமைத்து, அதன்மூலம் ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்தப் பகுதியிலே, அவசியம் இருப்பின், உடனடியாக சொந்தக் கட்டடங்களோ அல்லது பழுதடைந்த கட்டடங்களோ, அவற்றை குறிப்பிட்டுச் சொல்வாரேயானால் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் கருத்துரு பெற்று உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண்கள் 244, 245 மற்றும் 246 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா வரிசை எண் 247, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.